**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .134/2015** | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | |
| **Name** | : மாயி என்ற மாயாண்டி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( A1 present, A2 absent petition filed and allowed )

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.11.2024

---

**முதல் விசாரணை:**

நான் போத்தம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி உமா எனது மனைவியாவார். சாட்சிகள் 3 முதல் 7 வரையிலானவர்களை எனக்கு தெரியும். 1,2 எதிரிகளை எனக்கு தெரியும். நானும் எனது மனைவியும் ஒத்தப்பட்டி ரோடு, PMT நகரில் பால் பண்ணை வைத்து நடத்தி வந்தோம். 1,2 எதிரிகள் வட்டிக்கு பணம்கொடுத்து தொழில் செய்து வந்தார்கள். நாங்கள் எங்கள் தொழிலில் கொஞ்சம் பண கஷ்டம் இருந்ததால் 2வது எதிரி மகாலெட்சுமியிடம் 50,000/- ரூபாய் 2010ம் ஆண்டு வாங்கினோம். அதற்கு 6000/- ரூபாய் வட்டியாக எடுத்துக்கொண்டு மீதி பணத்தை எனது மனைவியிடம் 2வது எதிரி கொடுத்துள்ளார். பணத்தை திருப்பி செலுத்தி வரும்வேளையில் கொஞ்சம் பாக்கி உள்ளபோது மீண்டும் மாற்றி போட்டு பணம் கொடுத்துள்ளார்கள் எவ்வளவு பணம் என்று தெரியவில்லை.

2. எனது மனைவி எதிரிகளிடம் 6,50,000/- ரூபாய் வாங்கியதாகவும், அதற்கு 7,86,000/- வரை பணம் கட்டிவிட்டதாகவும் என்னிடம் சொன்னார். வட்டி கொடுத்த பின்பும் எதிரிகள் மீண்டும் மீண்டும் வட்டி போட்டு 4,40,000/- ரூபாய் கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அதையும் நாங்கள் கட்டி முடித்துவிட்டோம். எதிரிகளுக்கு வெண்ணிலை பத்திரம் எழுதிக்கொடுத்து இருந்தோம். அந்த பத்திரத்தை திருப்பி கேட்டபோது எதிரிகள் எங்களை வீட்டை விட்டு வெளியே செல்லுங்கள் என்றும் தீயை கொளுத்திவிடுவோம் என்றும் சொன்னார்கள். அதன்பின்பு நான் பால் பீச்ச போய்விட்டேன். அதன்பின்பு SP ஆபீஸில் புகார் கொடுத்தோம். எனது வழக்கறிஞர் முருகன் என்பவரிடம் தான் நாங்கள் பணம் கட்டியதற்கான சிட்டைகள் இருக்கிறது. போலீசார் என்னை

விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை** ;

3. எனது மனைவி மகளிர் சங்கத்தில் லோன் வாங்கி பால் கறந்து விற்கும் தொழில் செய்கிறார் என்றால் சரிதான். நாங்கள் சங்கத்தில் லோன் வாங்கி பத்து மாடுகள் வைத்திருந்தோம். வெளியில் இருந்து மாடு கொண்டுவருவர்களிடம் பால் பீச்சி விற்பனை செய்து அவர்களுக்கு பணம் கொடுப்போம் என்றால் சரிதான். மற்ற நபர்களுக்கு பணம் கொடுக்க வேண்டியிருந்ததால் பணம் கடன் வாங்கினோம் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் மீது அசலை மட்டும் திருப்ப கேட்டு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான் நாங்கள் ஏற்கனவே பணத்தை திருப்பி கொடுத்துவிட்டோம். நாங்கள் எதிரிகள் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டோம் என்றால் அதுபற்றி தெரியவில்லை. உயர் நீதிமன்றத்தில் மீடியேசன் சென்டரில் பேச்சுவார்த்தைக்கு சென்றோமா என்றால் முதல் 2 தடவை நான் சென்றேன் 3வது முறை நான் செல்லவில்லை.

4. எனது மனைவி மீடியேசனில் 4 லட்ச ரூபாய் கட்ட சொன்னதாக என்னிடம் சொன்னாரா என்றால் என்னிடம் சொல்லவில்லை. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் எங்களுக்கு நிவாரணம் எதுவும் கிடைக்காததால் அதனை மறைத்து SP ஆபீஸில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் அதுபற்றி தெரியவில்லை. 17.10.2012 மற்றும் 02.11.2012ம் தேதிகளில் எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்ததாக சொல்வது தொடர்பாக காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோமா என்றால் புகார் கொடுத்தோம். அந்த புகாரின் நகல் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோமா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை புகார் நகர் வக்கீலிடம் தான் உள்ளது.

5 . எதிரிகள் என்னிடம் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை என்றும், துாரத்து உறவினர் என்பதால் வட்டியில்லாமல் 6,50,000/- ரூபாய் பணம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல வட்டிக்கு தான் கொடுத்தார்கள். வட்டியில்லாமல் கொடுத்த 6,50,000/- பணத்தை நாங்கள் பத்து நாளில் திருப்பி தந்துவிடுவோம் என்று சொன்னால்சரியல்ல. பத்து நாளில் 2,10,000/- மட்டும் திருப்பி கொடுத்துவிட்டு மீதி 4,40,000/- பணத்திற்கு அ.சா.2ன் பெயரிலுள்ள சொத்தை பொறுப்பிற்காக எழுதிக்கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில்செய்யவில்லை விவசாயம் செய்கிறார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சொல்லும் தேதி எதிரிகள் எங்களிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு கொடுக்க

வேண்டிய 4,40,000/- த்தை இல்லையென்று சொல்லுவதற்காக சிவில் வழக்கு மற்றும் உயர் நீதிமன்ற வழக்கை மறைத்து SP யிடம் பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. SP யிடம் புகார் கொடுத்ததால் எந்த விசாரணையும் செய்யாமல் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல.

S.d./ Mayee @ Mayandi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.